01.08.2025

OS. No. 291/2018

**PW 1 – ஜான் ப்ரூனோ**

**1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

1–ஆம் பிரதிவாதி என் மனைவி. எங்கள் திருமணம் 05.06.2000–இல் நடந்தது. நான் மென்பொறியாளராக பணியாற்றுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். திருமண சமயத்தில் நான் மாதம் பத்தாயிரம் டாலர் சம்பாதித்தேன். அவ்வாறு பத்தாயிரம் டாலர் சம்பாதித்தேன் என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது, அதை தாக்கல் செய்ய முடியும். 1–ஆம் பிரதிவாதி திருமணத்தின்போது சட்டப்படிப்பு படித்திருந்தார் என்றால் சரியல்ல, படித்துக்கொண்டிருந்தார், அவர் அந்த படிப்பை முடிக்கவில்லை. திருமணம் ஆகி 15 நாளில் 1–ஆம் பிரதிவாதியை நான் அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்றேன். என் மனைவியை H4 Visa வில் அமெரிக்கா அழைத்துச்சென்றேன் என்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1–ஆம் பிரதிவாதி H4 Visa வில் வரவில்லை என்றாலும், Employment Visa வில்தான் வந்தார் என்றாலும் சரியல்ல. அவர் அங்கு Free lands–இல் வேலை செய்தார் என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலம் பத்தி 6–இல் என் மனைவியை பற்றி தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் மனைவி மீது சட்டப்படியான நடவடிக்கை அமெரிக்காவில் வைத்து எதுவும் எடுக்கவில்லை. தாவா சொத்தை என்னுடைய சொந்த பணத்தைக் கொண்டுதான் வாங்கினேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணத்தின்போது 1–ஆம் பிரதிவாதியின் தாயாருக்கு இரண்டு லட்சம் ரூபாய் பணம் கொடுத்தேன் என்பது பொய் என்றால் சரியல்ல. 1–ஆம் பிரதிவாதி என்மீது பொய்யாக ஒரு வழக்கை அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தாக்கல் செய்ய முடியும். என் மனைவி மீது விவாகரத்து கோரி இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவை பிரதிவாதி தனக்கு ஜீவனாம்சம் வழங்க வேண்டும் ./

**என்று இடைமனு தாக்கல் செய்த காரணத்தினால், நான் விவாகரத்து மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல, வழக்கு பெங்களூரு நீதிமன்றத்திற்கு மாற்றலாகி சென்றதால், என்னால் வழக்கை நடத்த இயலாது என்று வாபஸ் வாங்கிக்கொண்டேன். பிரதிவாதிக்கு ஜீவனாம்சம் கொடுக்கக்கூடாது என்பதற்காகதான் அந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் மனைவியின் பெயரில் கிரையம் பெறப்பட்டதால் அவருக்கும் அதில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.